முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி. எண். 159/2016

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி . . 1

பெயர் . . சுரேஷ்

தகப்பனார் / கணவர் பெயர் . . கோதண்டன்

வயது . .

தொழில் . .

கிராமம் . .

தாலுக்கா . .

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30ஆம் நாள் திங்கட்கிழமை திரு. என். சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சீனியர் எக்ஸிகூட்டராக பணிபுரிந்து வருகிறேன். விபத்தில் ஈடுபட்ட இனோவா கார் பதிவு எண். டி.என். 73 எ 0819 வாகனம் என்றால் சரிதான். மேற்படி கார் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் இருந்தது என்றால் இருந்தது. முதல் தகவல் அறிக்கையின் படி மேற்படி விபத்து ஏற்படுத்தியவர் பெயர் கிருபாகரன் என இருந்தது. மேற்படி கிருபாகரன் வாகனத்தை ஓட்டிசென்றபோது முன்பக்க டயர் வெடித்து பின்பக்க ஜாயிண்ட் இணைப்பு கட்டாகி சாலைஓர மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. கிருபாகரனுடைய தந்தையின் பெயரில் தான் மேற்படி வாகனம் உள்ளது. அவர் சம்பளம் வாங்கிக்கொண்டு ஓட்டும் ஓட்டுநர் அல்ல. மேலும் கிருபாகரனுக்கு பயிற்சி ஓட்டுநர் உரிமம் மட்டுமே இருக்கிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் படி 9 நபர்கள் பயணம் செய்ததாக உள்ளது. அதேபோல மேற்படி ஆர்.சி புத்தகத்தின்படி 8 நபர்கள் என

அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே காப்பீட்டின் படி 8 நபர்கள் தான் பயணம் செய்ய வேண்டுமென்றும் அவர்களுக்கு மட்டும் தான் காப்பீடு பொருந்தும். கிருபாகரனுக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் அளவுக்கு அதிகமான ஆட்களை ஏற்றிக்கொண்டு அதிகமான வேகத்தில் சென்று தனக்குதானே விபத்து ஏற்படுத்திக்கொண்டதால் காப்பீட்டு விதிகளின் படி மேற்படி மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோரமுடியாது. மேலும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**குறுக்கு விசாரணை**

பயிற்சி ஓட்டுநராக இருப்பதால் வாகனத்தை ஓட்டக்கூடாது என இருக்கிறதா என்றால் அது ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கு முன்பாக கொடுக்கப்படும் ஓட்டுநர் படிவம். விபத்தின்போது 8 நபர்கள் தான் பயணம் செய்தார்கள் என்றும் ஆனால் புகார் கொடுத்தவர்கள் தவறாக 9 நபர்கள் என சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. அதிக தூரம் பயணம் செய்து வந்ததாலும் மேலும் கோடைக்காலம் என்பதால் எதேர்ச்சையாக டயர் வெடித்து மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றும் இது மனுதாரரின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, அவர் முறையாக ஓட்டுநர் உரிமம் பெறாமல் வாகனத்தை ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது. அதனால் 2ம் எதிர்மனுதாரர் தான் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.